*Volume No: 1 Issue 2 June 2017*

*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal - Science Issue*
*ISSN: 2456-4613*
*IMIRJ, 1(2), 2017 [1-7]*

# சங்கத்தமிழ் இலக்கியமும் தாவர அறிவியலும் போற்றும் முல்லை மலர் – ஓர் ஆய்வு

முருகலட்சுமிகுமாரி.இரா[1], உமாதேவி.க[2]

[1]உதவிப்பேராசிரியை, தாவரவியல்துறை

[2]இந்திமொழி பயிற்றுநர்

வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்

தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வு நோக்கம்**

சங்க இலக்கியம் முல்லை மலரின் சிறப்பை நூற்றுக்கணக்கான இடங்களில் குறிப்பிட்டுள்ளது. தாவரவியலார் முல்லைக் கொடியை ஒலியேசி என்ற தாவரக் குடும்பத்தில் சேர்த்துள்ளனர். இக்குடும்பம் ஒலியாய்டியே, ஜாஸ்மினாய்டியே என்ற இரு துணைக் குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இம்முல்லைக்கொடியானது ஐவகை நிலங்களில் ஒன்றான முல்லை நிலத்தில் மட்டுமின்றி பிற புலங்களிலும் காணப்படுவதை இலக்கியச் சான்றுகள் மூலம் அறிய முடிகின்றது. முல்லைப் பூவின் தன்மை, குணம், இலை அமைப்பு, வாசனை போன்றவற்றை தாவர அறிவியலில் விரிவாக காணும் போதே, அம்முல்லையின் பண்பையும், அதனின் குணநலன்களையும், தலைவன் தலைவியிடத்து முல்லைப்பூவின் மேன்மை குறித்த செய்திகளை தமிழ் இலக்கியத்தில் மிகுதியாக காண முடிகின்றது. தாவர இனத்தை சார்ந்த இம்முல்லையைப் பற்றிச் சங்கத்தமிழ் இலக்கியங்களும் தாவரஅறிவியலும் கூறுவனவற்றை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**சிறப்புச் சொற்கள்** : ஜாஸ்மினம் ஆரிகுலேட்டம் - ஒலியேசி - ஜாஸ்மினம் - நிக்டாந்தெஸ் - நிக்டாந்தெஸ் ஆர்பார்டிரிஸ்டிஸ் - ஆலிவ் குடும்பம் - ஒலியாய்டியே - ஜாஸ்மினாய்டியே

**முன்னுரை**

தொல்காப்பியம் கூறும் ஐவகை நிலங்களில் ஒன்று முல்லை. அந்நிலத்தில் வளரும் பசிய கொடியின மலரே முல்லை ஆகும். தாவரவியலார் இதனை ‘ஜாஸ்மினம் ஆரிகுலேட்டம்’ என்பர். ஜாஸ்மினம் என்னும் இப்பேரினத்தில் ஏறக்குறைய 200 சிற்றினங்கள் உள்ளன. முல்லையுடன் தளவம், கொகுடி, செம்மல் என்ற பெயர்களும் காணப்படுகின்றன. இவற்றுள் ‘தளவம்’ செம்முல்லை எனவும், ‘கொகுடி’ ஒரு வகையான வெண்முல்லை எனவும், ‘செம்மல்’ சாதிப்பூ எனவும் கூறப்படுகின்றது.

தமிழ் இலக்கியம் ‘தளவம்’ என்பதை வெண்ணிற முல்லை எனச் சுட்டுகின்றது. ‘தளவம்’ என்பது பத்துப்பாட்டில் ஒன்றான மதுரைக்காஞ்சியின் இறுதி வெண்பாவில் ‘மல்லிகை’ எனச் சுட்டப்படுகின்றது. அது மட்டுமின்றி, குறிஞ்சிப்பாட்டிலும், பிற சங்கப் பாடல்களிலும் குளவி என்பதனை நச்சினார்க்கினியர் ‘காட்டு மல்லிகை’என்று கூறுவதை அறிய முடிகின்றது.

தாவரவியலார் ஒலியேசி என்ற இத்தாவரக் குடும்பத்தில் நிக்டாந்தெஸ் என்ற பேரினமும் உண்டு. இப்பேரினத்தைச் சார்ந்த பவள மல்லிகையை நிக்டாந்தெஸ் ஆர்பார்டிரிஸ்டிஸ் என்பர். இது பவளக்கால் மல்லிகை எனவும் பாரிசாதம் எனவும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. முல்லையும், மல்லிகையும் கொண்ட ஒலியேசி என்பது தாவரவியல் குடும்பம் ஆகும். இக்குடும்பத்தை ஆலிவ் குடும்பம் என்பர். இக்குடும்பத்தில் 22 பேரினங்களும் 400 சிற்றினங்களும் இருப்பதை ஆசியாவிலும் கிழக்கிந்தியத் தீவுகளிலும் காண முடிகின்றது.

**சங்க இலக்கியத்தில் முல்லை மலர்**

சங்க இலக்கியங்கள் கற்பு, வீரம், கொடை என்னும் சீரிய பண்புகளைப் பற்றி விரித்துரைக்கின்றது. கற்பு எனப்படுவது மலரிலும் மெல்லிய காமத்திலிருந்து விரியும். இதனைத் தொல்காப்பியம் ‘காமஞ் சான்ற’ எனத் தொடங்கும் நூற்பாவின் மூலம் உணர்த்துகிறது. இத்தகைய கற்புக்கு அடையாளமான மலராக திகழ்வது முல்லையாகும். ஆதலின் தமிழ் மக்களின் வாழ்வில் முல்லை முதலிடம் பெறுகின்றது.

**“முல்லை, குறிஞ்சி, மருதம் நெய்தல்”** [1]

என தமிழ் நிலத்தை தொல்காப்பியனார் பாகுபாடு செய்து, முல்லையை முதற்கண் அமைத்ததைக் காண முடிகின்றது. பண்டைத் தமிழில் ஐவகை நிலமான முல்லை நிலத்தில் வாழும் மக்களின் வாழ்வியல் மலராக கருதப்பட்டது முல்லை மலர். களவியலிலும், கற்பியலிலும், மற வாழ்விலும், புற வாழ்விலும் ஏறத்தாழ பதினேழு வகையாகப் பாடப்பட்டுள்ள தனிமலர் முல்லை ஆகும். காடும், காடு சார்ந்த நிலமும் முல்லை நிலம் எனப்படும். பொருள் தேடவும், அரச ஆணையை ஏற்றும் தலைமகன் தனது தலைவியைப் பிரிவான். அவன் திரும்பி வரும்வரை தலைவி அவனது பிரிவை ஆற்றியிருப்பதைத்தான் **முல்லை ஒழுக்கம்** என்பர். தமிழ்க்குடிமக்களின் அக

வாழ்விலும், புறவாழ்விலும் இணைந்துள்ளது முல்லையாகும்.

| சங்க இலக்கியப் பெயர் | : | முல்லை |
|---|---|---|
| சங்க இலக்கியத்தில் இதன் வேறு பெயர்கள் | : | கொகுடி, தளவம் |
| ஊரக வழக்குப் பெயர் | : | முல்லை, கொகுடி |
| ஆங்கிலப் பெயர் | : | ஜாஸ்மின் (Jasmin) |
| தாவரப் பெயர் | : | ஜாஸ்மினம் ஆரிகுலேட்டம் (Jasminum auriculatum, Vahl.) |

**தாவரவியல் ஆய்வு - ஜாஸ்மினம் எனும் பேரினத்தின் பண்புகள்**

நேரான அல்லது ஏறுகொடியாக உள்ள குறுஞ்செடிகள். இலைகள் எதிர் அடுக்கிலும் மாற்றடுக்கிலும் காணப்படும். தனி இலையாகவோ மூன்று சிற்றிலைகளைக் கொண்ட கூட்டிலைகளாகவோ காணப்படும்.

- ❖ தனிமலரைக் காண்பது அரிது.
- ❖ மலர்கள் அழகானவை; நறுமணமுள்ளவை.
- ❖ பூக்கள் தண்டின் உச்சியிலோ இலைக் கோணத்திலோ உண்டாகும்.
- ❖ பூவடிச் செதில்கள் மெல்லிய முட்டை வடிவானவை.
- ❖ புல்லிதழ்கள் குழல் போன்றும், புனல்வடிவு மற்றும் மணி போன்றும் காணப்படும்.
- ❖ புல்லிதழ்கள் மெல்லியவையாகக் காணப்படும்.
- ❖ அல்லிக்குழல் குறுகலாகவும் நீண்டும் இதழ்கள் அடியில் ஒட்டியும் அல்லது மேல் மடல்களாகவும் இருக்கும்.
- ❖ மகரந்தத்தாள் வழக்கமாக அல்லிக் குழலுள் அடங்கியிருக்கும்.
- ❖ மகரந்தப்பைகள் நீள் சதுரமாக இணைந்திருக்கும்.
- ❖ இரு அறைகளைக் கொண்ட சூலகம் உடையது.
- ❖ சூல் முடி பிளவானது.
- ❖ சூல் தண்டு நூல் போன்றது.
- ❖ கனி ஒரு சதைக்கனி
- ❖ ஒவ்வொரு சூலிலையிலும் ஒரு விதை காணப்படும்.
- ❖ விதையின் முளை சூழ்தசையிலை வித்திலைகள் குவிந்தும் தட்டையாகவும் காணப்படும்.
- ❖ முளை வேர் கீழ்மட்டமானது.

**பாரியும் முல்லையும்**

முல்லை ஒரு படர் கொடியாகும். இம்முல்லைக் கொடி கார்காலத்தில் வளமாக ஓங்கி வளர்ந்து தேரோடும் சாலையில் ஓரமாக படர்ந்து கிடக்கின்றது. அவ்வழியில் சென்ற கடையெழு வள்ளல்களில் ஒருவரான பாரி மன்னன், அம்முல்லைக் கொடி மீது இரக்கம் கொண்டு அக்கொடிக்கு படரும் கொம்பாக தன் தேரையே அவ்விடத்து நிறுத்தி வைத்து விட்டு அரண்மனை நோக்கி நடந்து சென்றார். ஓரறிவு உயிராகிய முல்லைக் கொடி மீது அவர் காட்டிய பரிவு புலவர்களின் உள்ளத்தைக் தொட்டது. இதனை,

"…………..சுரும்பு உண
நறுவ் உறைக்கும் நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குக் பெருந்தேர் நல்கிய
பிறங்கு வெள்ளருவி வீழும் சாரல்
பறம்பின் கோமான் பாரியும்….." [2]

என நத்தத்தனாரின் பாடல் வரிகள் மூலம் தெரிய முடிகின்றது.

"ஊருடன் இரவலர்க்கு அருளி தேருடன்
முல்லைக்கு ஈத்த செல்லா நல்இசை
படுமணி யானைப் பறம்பின் கோமான்
நெடுமாப் பாரி………." [3]

என்று கபிலர் பாடியதையும் கொண்டு காண முடிகின்றது.

## முல்லையின் பிற பெயர்கள்

புறநானூற்றில் புனைக்கொடி எனவும், அகநானூற்றில் பைங்கொடி முல்லை எனவும், ஐங்குறுநூற்றில் நெடுங்கொடி முல்லை எனவும், குறுந்தொகையில் பாசிலை முல்லை எனவும் வழங்கப்படுகின்றது. இக்கொடியானது பற்றி வளர கொம்பு இல்லையெனில் குன்றுகளில் கருங்கல்லின் மேலேயும் படர்ந்து வளரக்கூடிய இயல்பை உடையது. இதனை "கல்லிலர் முல்லை" என்று குறிஞ்சிப்பாட்டிலும், "முல்லை ஊர்ந்த கல் இவர்பு ஏறி" என்ற குறுந்தொகை வரிகளில் உணர முடிகின்றது.

## முல்லையின் பெயரால் சிறப்பு பெறுபவை

முல்லைப் பெயரால் முல்லைப்பாட்டு என்ற நூல் எழுதப்பெற்றுள்ளது. இந்நூலை காவிரிப்பூம்பட்டினத்து பொன்வணிகனார் மகனார் நப்பூதனார் எழுதியுள்ளார்.

முல்லைப் பெயர் கொண்ட **ஆண்பாற் புலவர்கள்** அள்ளூர் நன்முல்லையார் மற்றும் காவல் முல்லைப் பூதனார் ஆகியோராவர்.

திருமகேந்திரப் பள்ளியில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் **அன்னைக் கடவுளர்க்கு** "முல்லை நகை வடிவாள்" என்ற திருநாமம் அமையப்பெற்றுள்ளது. அங்குள்ள **சிவபெருமானுக்கு** "முல்லைவனநாதர்" என்ற பெயரும் வழங்கப்பட்டு வருகின்றது.

திருமுல்லைவாயில், முல்லையூர், முல்லைக்காடு, முல்லைப்பாடி எனப் பல **ஊர்ப்பெயர்களிலும்** முல்லை மலரின் பெயர் இடம் பெறுவதைக் காண முடிகின்றது.

பருவ காலத்தைக் குறிக்கும் முல்லையைக் **கார் முல்லை** என்பர். 'காரும் மாலையும் **முல்லை**' என்பது தொல்காப்பிய நூற்பா ஆகும். ஆதலின் கார்காலத்தையும், மாலைப்பொழுதையும் குறிப்பது முல்லை மலர் என்ற செய்தியை அறிய முடிகின்றது. இதனை,

"கார் நயந்து எய்தும் முல்லை" [4]

"எல்லை பைபயக் கழிப்பி முல்லை
அரும்புவாய் அவிலும் பெரும்புன் மாலை" [5]

என்னும் இவ்வடிகளின் மூலம் தெரிய முடிகின்றது.

முல்லை என்ற சொல்லுக்கே கற்பு என்ற பொருளும் தோன்றியது. இதனை,'மௌவலும் தளவமும் கற்பும் முல்லை' என்று சேந்தன் திவாகரம்

கூறுகின்றது. ஆகவே **கற்பு** என்ற மற்றொரு பெயரும் முல்லைக்குரியதாயிற்று.

**வாகைத்திணையில் முல்லைப்பெயர் பெற்றுள்ள துறைகள்**

போரில் வெற்றியைக் குறிப்பது வாகைத்திணை. இதன் உட்பிரிவான துறைகள் பல. அவற்றுள் முல்லையால் பெயர் பெற்ற 12 துறைகள் குறிப்பிடப்படுகின்றன. வாகைத் திணையின் வெற்றியை உறழ்ச்சியால் பெற்ற வாகை எனவும், இயல்பால் பெற்ற வாகை எனவும் இருவகையாகப் பேசுவர்.

| | | | |
|---|---|---|---|
| 1. | அரசமுல்லை | - | அரசனது வெற்றி மேம்பாடு கூறுவது |
| 2. | பார்ப்பன முல்லை | - | பார்ப்பனரது நடுவு நிலைச் சிறப்பைக் கூறுவது. |
| 3. | கணியன் முல்லை | - | கணித்துக் கூறும் சோதிடன் புகழ் கூறுவது. |
| 4. | மூதின் முல்லை | - | பழங்குடி வீரத்தாயின் மன வலிமை |
| 5. | அவைய முல்லை | - | அவையோர் நடுவு நிலைப் பெருமையைக் குறிப்பது |
| 6. | ஏறாண் முல்லை | - | ஏறு போன்றவனால் பெற்ற குடிப் பெருமை கூறுவது |
| 7. | வல்லாண் முல்லை | - | ஊர், குடி கூறி வீரனது நல்லாண்மை குறிப்பது. |
| 8. | காவல் முல்லை | - | அரசனது காவற் சிறப்பைக் குறிப்பது |
| 9. | பேராண் முல்லை | - | அரசன் போர்க்களத்தில் காட்டிய பேராண்மையைக் குறிப்பது |
| 10. | மறமுல்லை | - | படைவீரனது போர்த்துடிப்பைக் கூறுவது. |
| 11. | குடை முல்லை | - | மன்னனது கொற்றக்குடையின் சிறப்புக் கூறுவது |
| 12. | சால்பு முல்லை | - | அறிவிற் சிறந்த சான்றோரது சிறப்புப் பற்றியது |

**கற்பு நெறியின் சிறப்பை விளக்கும் முல்லை மலர்**

பண்டைத்தமிழரின் கற்பு ஒழுக்கத்திற்கு அறிகுறியாக விளங்குவது முல்லை மலராகும். நச்சினார்க்கினியர் என்னும் புலவர், அக்காலத்தில் வாழ்ந்த மகளிர் ‘கற்பின் மிகுதி தோன்ற முல்லை சூடுதல் இயல்பு’ என்கின்றார். இதன் மூலம் ‘‘கற்பின் சின்னம்’’ முல்லை மலர் என்ற செய்தி அறியப்படுன்றது. இவ்வுண்மையைச் சங்கச் சான்றோர்களும் விதந்து கூறியுள்ளனர் என்பதை,

‘‘முல்லை சான்ற கற்பின் மெல்லியல்’’ [6]

‘‘முல்லை சான்ற கற்பின்
மெல் இயல் குறுமகள் உறைவின் ஊரே’’ [7]

என்ற அடிகள் மூலம் தெரியமுடிகின்றது. பொருள் தேடச் சென்ற தலைவன் திரும்பி வரும்வரை தலைவி அவனது பிரிவை ஆற்றியிருப்பாள். இதனை ‘முல்லை ஒழுக்கம்’ என இலக்கியங்கள் கூறுகின்றன. மேலும், முல்லை மலர் என்றாலே கற்பு எனப்படுவதால் அது ‘கற்புமுல்லை’ என்று பாகுபடுவதையும் காண முடிகின்றது.

**முல்லை மலர் கொண்டு வாழ்த்துதல்**

முல்லைப் பூ வாழ்த்தும் மலராகும். முல்லை மலர்களை நாழி எனப்படும் மரத்தாலான படியில் நெல்லோடு கலந்து வைத்துக் கைதொழுது சான்றோரும் மங்கல மடந்தையரும் எடுத்துத் தூவி வாழ்த்துவர் என்னும் செய்தியை முல்லைப்பாட்டு தெரிவிக்கின்றது. இதனை,

“யாழிசை இன வண்டார்ப்ப நெல்லோடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பவிழ் அலரி நூஉய்க் கைதொழுது” [8]

மேலும் நாள்தோறும் அந்திமாலையில் இல்லத்தை மங்கலமாக்குவதற்கு முல்லை மலர்களையும், நெல்லையும் தூவி விளக்கு ஏற்றும் வழக்கம் இருந்ததை சிலப்பதிகாரச் செய்தி விளக்குவதன் மூலம் காண முடிகின்றது.

கார்காலத்தில் திரும்பி வருவதாகத் தன் தலைவியிடம் கூறிவிட்டுப் பொருள் வேட்கையில் இளமையையும் பாராது, அவளைப் பிரிந்து சென்ற தலைவன் பருவம் வந்துழியும் திரும்பவில்லை. அதுவரை பிரிவு ஆற்றியிருந்த தலைவி, கார்காலம் தனது தனிமையைக் கண்டு “நகுமோ தோழி” என்று நொந்து உரைப்பதையும், பிரிந்து வந்த தலைவன் கார்காலத்தில் பூத்த முல்லைக்கொடி தன்னுடைய தனிமையைக் கண்டு சிரிப்பதாக வருந்தி “இது தகுமோ” என்று வினவுவதையும், பின் இருவரும் இணைந்த போது “வாழியோ முல்லை” என்று முல்லைக்கு வாழ்த்துரைப்பதையும் இலக்கியங்கள் சுட்டுகின்றன. இதனை,

“இளமை பாரார் வளநசை இச் சென்றோர்
இவனும் வாரார் எவணரோ என
பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை இலங்கு எயிறாக
நகுமோ தோழி நறுந்தண் காரே” [9]

“கார்புறந் தந்த நீருடை வியன்புலத்து
பல்ஆ புகுதரூஉம் புல்லென் மாலை
முல்லை வாழியோ முல்லை நீ நின்
சிறு வெண் முகையின் முறுவல் கொண்டனை
நகுவை போலக் காட்டல்
தகுமோ மற்று இது தமியோர் மாட்டே” [10]

என்னும் குறுந்தொகை வரிகள் பறைசாற்றுகின்றன.

**முல்லை மலர் குறித்த பிற செய்திகள்**

முல்லைப் பூவை தனியாகவும், பிற வண்ண மலர்களை விரவிக் கண்ணியாகவும், மாலையாகவும் தொடுத்து மகளிரும் ஆடவரும் அணிவர். இச்செய்தியை கலித்தொகை மற்றும் பதிற்றுப்பத்தின் மூலம் அறிய முடிகின்றது.

களவு நிலை கடந்த மகளிர் கடிமணங் கொள்ளுங்கால் சூடுவது முல்லை மலர் எனவும், அதனைத் தொடர்ந்து கற்பு

நிலையில் ஒழுகும் போது முல்லை மலரைத் தவறாது சூட்டிக் கொள்வர் என்னும் செய்தியையும் ஐங்குறுநூற்றின்பால் தெளிய முடிகின்றது.

களவொழுக்கத்தில் மணம் புரிந்த தலைவன் அணிந்திருந்த முல்லைக் கண்ணியின் நறுமணத்தை தலைவியும் பெற்றாள். தான் பெற்ற அம்மணத்தின் தன்மையை அவள் விவரிக்கும் விதமாக புலவர் அரிசில்கிழார் பாடிய குறுந்தொகைப் பாடல் மூலம் தெரிய முடிகின்றது.

**முடிவுரை**

சங்க இலக்கியத்தில் மிகுதியாகப் பாடப்பட்ட மலர் முல்லை ஆகும். அகம் மற்றும் புறத்துறைகளில் இம்முல்லைமலரினைக் கொண்டு புலவர் பெருமக்கள் பாடிய பாடல்கள் மூலமாக தாவர இயல் உண்மைகளையும் கண்டறிந்துள்ளனர். கடையெழு வள்ளல்களில் ஒருவரான பாரி வேந்தனுக்கு, ஓரறிவு உயிராகிய இம்முல்லைக் கொடியின் மீது பிறந்த கருணையையும், சங்ககால மக்கள் முல்லையை வாழ்த்தும் மலராகப் போற்றியதையும், முல்லைமலரானது கற்பின் மேன்மையை எடுத்துக்காட்டியும், முல்லை குறித்த பிற செய்திகளையும் இவ்வாய்வுக் கட்டுரையின் மூலம் உணர முடிகின்றது.

**அடிக்குறிப்பு**

1. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - செய்யுள் -104
2. சிறுபாணாற்றுப்படை .8…..91
3. புறநானூறு 201:2-5
4. ஐங்குநூறு 454
5. நற்றிணை. 369:3 – 4
6. சிறுபாணாற்றுப்படை. 30
7. நற்றிணை. 142: 10-11
8. முல்லைப்பாட்டு 7-9
9. குறுந்தொகை – 126
10. மேலது– 162

**துணைநூற்பட்டியல்**

1. சங்க இலக்கியத்தாவரங்கள்-கு.சீனிவாசன் - தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
2. உரைநடைத்தமிழில் சங்கஇலக்கியம் - எட்டுத்தொகை – வித்துவான். எம்.நாராயணவேலு பிள்ளை – நர்மதா பதிப்பகம், சென்னை.